4. கட்டணம் மற்றும் அறவிடல்கள்

4.1 அட்டை உரிமையாளர் வங்கியின் இணைப்பக் கட்டணத்தையும் வருடாந்த கட்டணத்தையும் செலுத்த இணங்கியுள்ளார். அந்த கட்டணம் அட்டையின் கணக்கில் வரவு வைக்கப்படுவதுடன், அட்டை கணக்கில் தெரிவிக்கப்பட்டுள்ள காலாவதியாகும் திகதிக்கு ஒரு மாதத்திற்கு முன்னதாக அறிவிக்கப்படும் பட்சத்தில் அல்லாமல் அது மீள அளிக்கப்படமாட்டாது.

4.2 அட்டை கணக்கின் பரிவர்தனை நடவடிக்கைகள் செயல்பட ஆரம்பித்த திகதி முதலான காலப்பகுதிக்கான வட்டி அறவிடப்படுவது, காலத்திற்குக் காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படுவதற்கு அமைவான வருடாந்தர கட்டணத்திற்கு அமைவாக, சொல்லப்பட்ட காலப்பகுதியின் நாளாந்த சராசரியின் முழு அளவிலான கொடுப்பனவு வரையிலான வருடாந்தர கட்டணம், பிரதம அட்டை உரிமையாளருக்கு இணையத்தளத்தின் ஊடாக பிரசுரிக்கப்படும். அட்டையினை உபயோகித்து பெறப்படும் கொள்வனவு மற்றும் முற்பணம் பெறுவது என்பனவற்றை பெறும் பொழுதும் சொல்லப்பட்ட வட்டி மற்றும் வட்டி கணக்கிடும் முறைமையே செயல்படுத்தப்படும். அப்படியாக அறவிடப்படும் வட்டி, அட்டைக் கணக்கின் கணக்கு விபர திகதியில் பற்றுச் செய்யப்படும். அட்டை உரிமையாளரின் வசதி கருதி, கொடுபடாத தொகைகளுக்கான வட்டி முறைமை குறித்த விளக்க வரைபடத்துடனான விபரங்களுடன் இணையத்தளத்தில் தரப்படும்.

4.3 கொடுப்பனவிற்கான திகதியன்று கொடுக்கத் தவறிய முழுத் தொகையினையும் அட்டை உரிமையாளர் கொடுக்கத் தவறும் பட்சத்தில், மிகுதியாகக் கொடுக்கப்பட வேண்டிய கணக்கு விபர திகதியன்று, நாளாந்த மிகுதி சராசரி முறைமைக்கு ஏற்ற கட்டண கோரிக்கை காலம் வங்கியின் தீர்மானத்திற்கு அமைய காலத்திற்குக் காலம் வருடாந்தர முறைமையில் எடுக்கப்படும் தீர்மானம், பிரதம அட்டை உரிமையாளருக்கு இணையத்தளத்தில் பிரசுரிப்பதன் மூலம் தெரிவிக்கப்படும். அட்டையினை உபயோகித்து பெறப்படும் கொள்வனவு மற்றும் முற்பணம் எனபனவற்றைப் பெறும் பொழுது சொல்லப்பட்ட வட்டி மற்றும் வட்டி முறைமையே செயல்படுத்தப்படும், அப்படியாக அறவிடப்படும் வட்டி அட்டை கணக்கு விபர திகதியில் பற்றுச் செய்யப்படும். அட்டை உரிமையாளரின் வசதி கருதி, கொடுபடாத தொகைகளுக்கான வட்டி முறைமை குறித்த விளக்க வரைபடத்துடன் விபரங்கள் இணையத்தளத்தில் தரப்படும்.

4.4 தவறான அபிப்பிராயம் அற்ற முறையில், குறிப்பிடப்பட்ட வட்டிக் கட்டண கொடுப்பனவினை அட்டை உரிமையாளர், கொடுப்பனவுத் தினத்தில் கொடுக்கப்பட வேண்டிய குறைந்த கட்டணத்தை செலுத்த தவறும் பட்சத்தில் கணக்கு விபர திகதியான மிகுதியான கொடுபடாத மொத்த தொகைக்கு அமைய காலதாமத கட்டணம் அறவிப்படுவதுடன், அதற்கான கட்டணத்தை காலத்திற்குக் காலம் வங்கி நிர்ணயிப்பதுடன், அது பிரதம அட்டை உரிமையாளருக்கு அறிவிக்கப்படுவதுடன், இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்படும்.

4.5 எந்தக் காரணத்தைக் கொண்டும், ஏதாவது காசோலை அல்லது கொடுப்பனவு தொடர்பான உத்தரவு, அட்டை உரிமையாளரினாலோ அல்லது வேறு எந்த தரப்பினராலோ வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதற்கான கொடுப்பனவு மறுக்கப்படும் பட்சத்தில், அட்டை உரிமையாளரிடம் இருந்து அறவிடுவதுடன், அட்டைக் கணக்கில் இருந்து, வங்கியினால் நிர்ணயிக்கப்படும் தொகை ஒன்றினை கையாளும் கட்டணமாக வரவு வைக்கப்படும். அஞ்சல் கட்டணமாக அறவிடுவதற்கு மேலாக இந்த அறவீடு மேற்கொள்ளப்படும்.

4.6 அட்டைக் கணக்கில் வைப்புச் செய்யப்படும் சகல முற்பணத்திற்காகவும், வங்கியினால்நிர்ணயிக்கப்படும் கட்டணம் ஒன்று அறவிடபடுவதுடன், அது பிரதம அட்டை உரிமையாளருக்கு அறிவிக்கப்படுவதுடன், இணையதளத்திலும் பிரசுரிக்கப்படும். அட்டையின் மூலமான கொடுப்பனவுகள் மூலம் பெறப்படும் பயணிகள் காசோலை, பணத்திற்கான மற்றும் தந்தி மூலமான மாற்றங்கள் என்பனவும் முற் பணமாகவே கணக்கிடப்படும்.

4.7 கட்டண கோரிக்கை காலப் பகுதியினுள், வழங்கப்பட்ட அட்டை வரையறைக்கும் அதிகமாகும் பொழுதில், வரையறைக்கும் அதக்மாவதற்கான கட்டணம் ஒன்று அறவிடபப்படும். அதிகமாவதற்கான கட்டணம் காலத்திற்குக் காலம் வங்கியினால் மேற்கொள்ளப்படுவதுடன் அது குறித்து பிரதம அட்டை உரிமையாளருக்கு அறிவிக்கப்படுவதுடன் இணையத் தளத்தில் பிரசுரிக்கப்படும். இதற்காக எந்த வங்கி கட்டணத்தின் தொகையும், வரையறை கட்டணத்திற்கு விண்ணப்பிக்கும் போது பரிசீலனைக்காக எழுத்துக் கொள்ளப்படும்.

4.8 இலங்கையின் எரிபொருள் நிலையங்களில் விநியோகிக்கப்படும் பெட்ரோல், டீசல், காஸ் மற்றும் ஏனைய பொருட்கள், கொள்வனவு செய்யப்படும் பொழுது, வங்கியினால் தீர்மானிக்கப்படும், கையாளும் கட்டணம் ஒன்று அறவிடப்படுவதுடன், பிரதம அட்டை உரிமையாளருக்கு அறிவிக்கப்படுவதுடன் இணையத் தளத்திலும் பிரசுரிக்கப்படும்.

4.9 அட்டையினை சமர்ப்பித்து மேற்கொள்ளப்படாத அட்டைப் பரிவர்தனை நடவடிக்கைகளுக்காக, வங்கியினால் தீர்மானிக்கப்படும் கையாளும் கட்டணம் ஒன்று அறவிட முடியும் என்பதுடன், அது பிரதம அட்டை உரிமையாளருக்கு அறிவிக்கப்படுவதுடன், இணையத் தளத்திலும் பிரசுரிக்கப்படும்.

4.10 விற்பனை பணத்திற்கான உத்தரவை போட்டோ பிரதியை பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கான கட்டணம் தீர்மானிக்கப்பட்டு, அட்டைக்கணக்கில் வரவு வைக்கப்படுவதுடன், பிரதம அட்டையாளருக்கு அறிவிக்கப்படுவதுடன் இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்படும்.

4.11 தற்போது பொருந்தக் கூடிய முத்திரைக் கட்டணம் அல்லது வேறு ஏதாவது சட்டபூர்வமான கட்டணம் அல்லது வரி என்பன அட்டைக் கணக்கில் அறவிடப்படும் அட்டையின் கீழ் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு பரிவர்தனை நடவடிக்கைகள் மேலதிக அட்டை உரிமையாளர்களுக்கு அட்டைகள் விநியோகிக்கப்படுவது, உட்பட அல்லது எந்த வகையிலுமான தெரிவிக்கப்பட்ட அல்லது சட்டங்கள் மற்றும் திட்டங்களுக்கு அமைவானது.

4.12 எந்த காரணங்களினாலும், கடன் அட்டைக்குப் பதிலாக புதிய தொன்று மாறுபட வேண்டி இருப்பின், வங்கியின் முடிவிற்கு அமைய கடன் அட்டை மாற்றுவதற்கான கட்டணம் ஒன்று, அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

5. மேலதிக அட்டை

5.1 பிரதம அட்டை உரிமையாளரின் வேண்டகோளுக்கு அமைய வங்கி மேலதிக அட்டையினை பிரதம அட்டை உரிமையாளரின் நேரடி குடும்ப உறுப்பினர்களுக்கு மேலதிக அட்டையினை வழங்கலாம், என்பதுடன், அதனை உபயோகிப்பவர்கள் இந்த ஒப்பந்தத்தின் அதே சட்ட திட்டங்களுக்கு அமைவான கடற்பாட்டைக் கொண்டுள்ளவர்கள். மேலதிக அட்டை உரிமையாளர்களினால் மேற்கொள்ளப்படும் அட்டை பரிவர்தனை நடவடிக்கைகள் மற்றும் பண மீளப் பெறுவது என்பன அட்டைக் கணக்கில் சரி செய்வதுடன், அது பிரதம அட்டை உரிமையாளருக்கு அனுப்பி வைக்கப்படும் மாதாந்தர கணக்கு கூற்றில் பிரதிபலிப்பதுடன், மேலதிக அட்டை உரிமையாளருக்கு தனியான கணக்கு கூற்று வழங்கப்பட மாட்டாது.

5.2 மேலதிக அட்டையினை உபவயோகிக்கும் போது, எதாவது கட்டணம் வங்கிக்கு சேர வேண்டிய நிலை ஏற்படின், பிரதம அட்டை உரிமையாளர் மற்றும் மேலதிக அட்டை உரிமையாளர் ஆகியோர் இணைந்து அல்லது சில பொறுப்பைக் கொண்டுள்ளனர். அட்டைக் கணக்கில் கொடுபடாத தொகையாக காட்டப்படும் முழுத் தொகைக்கும் பிரதம அட்டை உரிமையாளரே பிரதான பொறுப்பாளியாவார், என்பதுடன் மேலதிக அட்டை உரிமையாளரினால் ஏற்படுவதற்கும் பிரதம அட்டை உரிமையாளரே பொறுப்பை ஏற்க வேண்டும் என்பதுடன், இந்த நிலை வங்கிக்கு கொடுபடாத தொகை இருக்கும் வரை பொறுப்பாளியாக இருப்பார், பிரதம அட்டை உரிமையாளருக்கும், மேலதிக அட்டை உரிமையாளருக்கும் இடையேயான உறவு நிறுத்தப்பட்டாலும் இது பொருந்தும்.

5.3 மேலதிக அட்டை வழங்கப்பட்டதன் பின்னர், பிரதம அட்டை உரிமையாளரினாலோ அல்லது மேலதிக அட்டை உரிமையாளரினாலோ எழுத்து மூல அறிவித்தல் ஊடாக ரத்து செய்யும் வரை அது செயல்படும்.

5.4 இந்த ஒப்பந்தம் மற்றும் பிரதம அட்டையின் பாவனை முடிவடைந்ததன் பின்னர் மேலதிக அட்டை/அட்டைகள் என்பனவற்றின் பாவனையும் முடிவடைவதுடன், மேலதிக அட்டை/அட்டைகள் என்பன உடனடியாக வங்கியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

6. கணக்கிடலும் கொடுப்பனவும்

6.1 பிரதம அட்டை உரிமையாளர் விடியினை கணக்கிட்டு, கொடுப்பனவின் திகதியினை நிர்ணயிப்பதற்கு ஏற்ற வகையில் கணக்கிடும் கால இறுதியில், கணக்கு கூற்று விபரத்தை மாதாந்தரம் வங்கி, பிரதம அட்டை உரிமையாளருக்கு அனுப்பும் (வங்கியினால் மேற்கொள்ளப்படும் தீர்மானத்திற்கு அமைய ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தினத்தில்) மாதாந்தர கணக்கு கூற்றில், பிரதம மற்றும் மேலதிக அட்டை உரிமையாளர்களினால் கணக்கிடும் காலப்பகுதியினில் மேற்கொண்ட செலுத்த வேண்டியது முந்தைய கூற்றில் இருந்து கொண்டு வரப்பட்ட தொகை, அட்டை நிலையத்தினால் கணக்கிடும் கால பெறப்பட்ட கொடுப்பனவுகள் கணக்கிடும் காலத்தின் அட்டைக் கணக்கு, இறுதி கொடுப்பனவுத் தொகை, நிலுவையில் கொடுபடாத மொத்த தொகை

6.2 மாதாந்தர கூற்றினை பிரதம அட்டை உரிமையாளர் பெறத் தவறும் பட்சத்தில், தமக்கு மாதாந்தர கூற்று கிடைக்கவில்லை என்பதனை கணக்கிடும் காலத்தின் இறுதி 10 நாள் காலப் பகுதியினுள், பிரதம அட்டை உரிமையாளர், அட்டை நிலையத்திற்கு அறிவிக்க வேண்டியது அவரது கடமையாகும்.

6.3 அட்டை உரிமையாளர், வங்கியின் வாடிக்கையாளர் என்பதனால் அவர் தனது இலத்திரனியல் வங்கிச் சேவை /உரித்தான வாய்ப்பின் ஊடாக, அட்டை பரிவர்தனை நடவடிக்கைகள், கணக்கின் நிலபரம் என்பனவற்றை கண்டறிந்து பட்டியல் நிறைவேற்றம் நிறைவேற்றம்.·.கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம்.

6.4 மாதாந்தர கணக்குக் கூற்றை பெறவில்லை என்பதன் மூலம் அட்டை உரிமையாளர் வங்கிக்கான குறிப்பிட்ட திகதியில் தனது கொடுப்பனவுகளை வழங்கும் பொறுப்பில் இருந்து மன்னிப்பு பெற்றவராக மாட்டார்.

6.5 அட்டை கணக்கு தொடர்பாக அட்டை உரிமையாளர், வங்கிக்கு கொடுப்பனவுகளை செலுத்தப்படும் போது, அட்டை நிலையத்தில் இருந்து வங்கி அதனை பெறும் போது அல்லது அட்டை உரிமையாளரினால், வங்கிக்கு கொடுக்கப்பட வேண்டிய கடன் என்பன குறித்து, சட்ட திட்டங்களுக்கு அமைவான உத்தரவு குறித்து வங்கி தீர்மானத்தை மேற்கொள்ளும்.

6.6 வங்கியின் எந்த கிளையிலும், நடை முறைக் கணக்கையோ அல்லது சேமிப்புக் கணக்கையோ, கொண்டுள்ள அட்டை உரிமையாளர் கொடுப்பனவு செலுத்த வேண்டிய தினத்திற்கு முன்னர் நேரடியாக பண அறவீடு பணிப்புரை ஒன்றினை மேற்கொள்ள முடியும். கொடுப்பனவுப் பணிப்புரைகளில் ஏதாவது மாற்றங்கள் அல்லது அதனை ரத்து செய்வதானால் குறைந்தது அடுத்த கொடுப்பனவுத் திகதிக்கு, இரண்டு வாரங்களுக்கு முன்னர் பணிப்புரை அட்டை நிலையத்தை வந்தடைய வேண்டும்.

6.7 அட்டை உரிமையாளர், அட்டைக் கணக்கு தொடர்பான ஒவ்வொரு கணக்குக் கூற்றையும் பரிசோதித்து தவறுக் குற்றச்சாட்டு ஏதாவது இருப்பின், கூற்றுத் திகதியில் இருந்து 14 நாட்களுக்குள் அறிவிக்கத் தவறும் பட்சத்தில், கணக்குக் கூற்று மற்றும் அதில் காட்டப்பட்டுள்ள எல்லாத் தரவுகளும் சரியானது என்ற முடிவை எடுப்பதுடன், அட்டை உரிமையாளர் பின்னர் கணக்குக் கூற்றுக் குறித்து மாறுபட முடியாது. சகல கணக்குக் கூற்றுக்களும், அட்டை உரிமையாளரினால் இறுதியாக வழங்கப்பட்ட முகவரிக்கு அமைய சாதாரண அஞ்சல் மூலம் அறிவிக்கப்படுவதுடன், அஞ்சலில் இட்ட நேரத்தில் இருந்து 48 மணி நேரத்தினுள் கிடைக்கப்பட்டுள்ளதாக கருதப்படும். அட்டை கணக்கு தொடர்பாக முறைப்பாடு ஏதாவது இருப்பின் அட்டை நிலையத்துடன் அட்டை உரிமையாளர் 011-4523523 என்ற தொலைபேசியின் ஊடாக, அல்லது காலத்திற்குக் காலம் வங்கியினால் வெளியிடப்படும் இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ள வேண்டும், என்பதுடன் இணைய தளத்திலும் பிரசுரிக்கப்படும்.

6.8 அட்டை உரிமையாளர் தனக்கும் வங்கிக்கும் இடையேயான செலவாணி கட்டண பெறுமதியினை, அல்லது மீள செலவாணி தீர்மானம் அல்லது எந்த வகையிலான செலவாணி மாற்றல், என்பதனை இறுதியானதும் நிறைவானதாகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும். வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாவிற்கோ அல்லது இலங்கை ரூபாவினை வெளிநாட்டு நாணயமாகவோ அல்லது பரஸ்பரமாற்றம் நாணய கணக்கு கொடுப்பனவிற்கு அமைவாகவும், அட்டை உரிமையாளரின் கொடுபட வேண்டியவை அனைத்தும் இறுதியில் இலங்கை ரூபாவிலேயே செயல்படும்.

6.9 சகல நாணய மாற்று மற்றும் மீள் நாணய மாற்று காரணமாக வங்கிக்கு எந்த விதமான நட்டம் ஏற்படாத வகையில் அமைவதற்கு அட்டை உரிமையாளர் வங்கிக்கு அப்படியான நட்டத்தை நிவர்த்தி செய்ய உறுதி வழங்கிறார். நாணய மாற்று பாதிப்பு என்பது வங்கிக்கு அல்லது அதன் முகவர் அல்லது தொடர்பாளர்களுக்கு நாணய விகிதத்தில் ஏற்படும் மாறுபாடு அல்லது சம்பந்தப்பட்ட நாணயத்தின் மதிப்புக் குறைப்பு ஆகும்.

6.10 அட்டை உரிமையாளர் இத்தால் ஏற்றுக்கொள்வது, என்னவெனில் அட்டை உரிமையாளரின் மரணத்திற்குப் பின்னர் அட்டைக் கணக்கில் கொடுபடாமல் நிலுவையில் உள்ள பணத்தை அவரின் நிறைவேற்றாளர்கள் அல்லது நிர்வகிப்பவர்கள் அல்லது சட்ட பிரதிநிதிகள் அல்லது வாரிசுகள் மீள செலுத்த இத்தால் ஏற்றுக் கொள்கின்றனர்.

7. கணக்கு பட்டியலின் விபரம்

7.1 ஏதாவது விற்பனை பணத்திற்கான உத்தரவு மற்றும் அல்லது கட்டணங்களைக் குறிக்கும் அச்சடிக்கப்பட்ட அல்லது நிறைவு செய்யப்பட்ட விலைப்பட்டியல்.·.அச்சடிக்கப்பட்ட அல்லது விற்பனை இயந்திரத்தின் மூலம் பெறப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட இலத்திரனியல் அச்சு போன்றவை அட்டை உரிமையாளரினால் குறிப்பிட்ட தொகை வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை என்பதனை கண்டறிவதற்கான உரித்தை வங்கி கொண்டுள்ளதனை அட்டை உரிமையாளர் இத்தால் ஏற்றுக் கொள்கிறார்.

7.2 ஏதாவது கணக்கு பட்டியலின் விபரம்இ எழுத்து மூலமானதோ அல்லது மற்றைய ஆவணங்கள், அட்டை பரிவர்தனை நடவடிக்கைகளை காட்டும், கொடுப்பனவுகள் அல்லது பண பரிவர்தனை இயந்திரத்தினால் மேற்கொள்ளப்படும் மீளப்பெறல்கள் மற்றும் வங்கியின் கணக்குப் பதிவுகள் கணனி பதிவுகள் அல்லது ஆவணங்கள் மற்றும் நினைவக களஞ்சியம் மற்றும் வங்கியின் அட்டை நிலையத்தின் முகாமையாளரினால் கையெழுத்து இடப்பட்டதும் அத்தாட்சிப்படுத்தப்பட்டது அல்லது இந்த காரணங்களுக்காக இதற்கான வங்கியினால் பட்டவர் கூற்று சட்டத்திற்கு போதுமானதும், இறுதியுமான உறுதி அட்டை உரிமையாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், வேறு ஒரு ஆவணங்களோ அல்லது உறுதிச் சீட்டு தேவையில்லை என்பதுடன், நீதித்துறை சட்டங்களுக்கு அமைய ஏற்றுக் கொள்ளக் கூடியது என்பதுடன், அத்துடன் காட்டப்பட்டுள்ள தொகை அட்டை உரிமையாளரினால் வங்கிக்கு வழங்கப்பட வேண்டிய தொகை என்பதனை இத்தால், அட்டை உரிமையாளர் ஏற்றுக் கொள்கிறார்.

7.3 எந்த கணக்கு பட்டியலின் விபரத்திலும் தெரிவிக்கப்படும் தகவல்கள், அதில் இருந்து எடுக்கப்பட்டது எழுதியதோ அல்லது (ை) உப பந்தியில் காட்டப்பட்டுள்ள ஏனைய ஆவணங்களோ, மேலே குறிப்பிடப்பட்டதற்கு அமைய விறபனை இயந்தரங்களின் ஊடாக அட்டை மூலம் மேற்கொள்ளப்பட்ட அட்டை பரிவர்தனை நடவடிக்கை மூலமானது அச்சடிக்கும் இயந்திரம் மற்றும் பண பரிவர்தனை இயந்திரத்தின் ஊடாக மீளப்பெறல்கள், மற்றும் 2006 ம் ஆண்டின் 19 ம் இலக்க இலத்திரனியல் பரிமாற்றல் தொடர்பாக சட்டத்திற்கு அமைவானதையும் அட்டை உரிமையாளர் இத்தால் ஏற்றுக் கொள்கிறார்.

8. ATM இயந்திரம் மற்றும் Pin இன் பாவனை

8.1 அட்டையில் தானியக்க **ATM** இன் சேவை இணைக்கப்பட்டுள்ளதன் காரணமாக இலத்திரனியல் முறைமையின் ஊடாக பணத்தைப் பெற வசதி உள்ளதன் காரணமாக, அப்படியான சேவைகளைப் பெறுவதற்கு, வங்கியின் விசா.·.மாஸ்டர் அட்டை சர்வதேச ஒப்பந்தத்தின் கீழ், அட்டையினை உபயோகிப்பதற்கு அந்நிய செலவாணி கட்டுப்பாட்டு சட்டத்தின் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளார்.

9. அட்டை மற்றும் Pin இனை பாதுகாத்தல்

9.1 அட்டையின் பாதுகாப்பை முடியுமானவரையில் அட்டை உரிமையாளர் பேணுவதுடன், வேறு எந்த நபருக்கும் **Pin** விபரம் தெரிவதனை தடுப்பதுடன் **Pin** குறித்த விபரங்களை எந்த வகையிலும் எழுதி வைக்கக் கூடாது.

10. பொறுப்பு/அட்டை தொலைதல்

10.1 அட்டை காணாமல் போனால்.·.களவாடப்பட்டால்.·.அழிக்கப்பட்டால் அல்லது வேறு ஏதாவது காரணங்களினால் அட்டையை பிழையான வழியில் பாவிக்க அல்லது **PIN** குறித்த தகவல்கள் வேறு யாருக்கும் தெரியவந்தால், அட்டையின் உரிமையாளர் உடனடியாக அது குறித்து பொலிசாரின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும், என்பதுடன் அட்டையின் களவு அல்லது விபரங்கள் வெளியானது குறித்து அட்டை நிலையத்திற்கு வாய் மூலம் தெரிவித்திருந்தால், அட்டை நிலையத்திற்கு எழுத்து மூலமாகவும் உறுதிப்படுத்தினால் மட்டுமே வலுவான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

10.2 எழுத்து மூலமான அறிவுறுத்தல் கிடைக்கும் வரை அட்டையின் பரிவர்தனை நடவளக்கைகள் மற்றும் வைப்பு பண மீளப்பெறுவது அனைத்திற்கும் அட்டை உரிமையாளரிடம் இருந்து ஒப்பந்தத்திற்கு அமைய அறவிடப்படும்.

10.3 இந்த விடயம் தொடர்பான சகல தகவல்களையும் தருவதுடன் அட்டை காணாமல் போனது அல்லது அட்டை பிழையான வழியில் உபயோகித்தமை அல்லது ˚பை விபரங்கள் வெளியானது போன்ற, விபரங்களின் மூலம் வங்கி, அட்டையினை மீள பெறுவதற்கான சகல அவசிய நடவடிக்கைகளையும் எடுக்கும் அத்துடன் பொலிசாருக்கு வழங்கிய முறைப்பாடு தொடர்பான அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதி ஒன்றும் வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

10.4 வங்கியின் முற்றும் முழுதான நடவடிக்கைக்கு அமைய, மாற்று தொலைந்த அல்லது களவாடப்பட்ட அட்டைக்குப் பதிலாக, மூல அட்டை அதே நிபந்தனைகளுக்கு அமைவாக மாற்றம் ஒன்றுடன் வழங்குவது குறித்து வங்கி முற்று முழுதான தீர்மானத்தை மேற் கொள்ளலாம்.

10.5 தொலைந்த அல்லது களவாடப்பட்ட அட்டையினை அட்டை உரிமையாளர் மீள பெறும் பட்சத்தில், அது உடனடியாக அட்டை நிலையத்திடம் கையளிக்கப்பட வேண்டும்.

11. விதிவிலக்கு/தவிர்ப்பு

11.1 வர்த்தகர் ஒருவர், வேறு ஏதாவது வங்கி அல்லது வேறு எந்த தரப்பினராவது அட்டைக்கான முழு அளவில் அத்தாட்சிப் படுத்தப்பட்ட அட்டையின் வரையறைக்கு அமைய முற்பண வசதிகளையோ ஏனைய கடன் வசதிகளையோ அட்டைக்கு வழங்க தவறுவதன் காரணமாக ஏற்படும் நட்டம் அல்லது பாதிப்புகளுக்கு வங்கி பொறுப்பேற்கமாட்டாது என்பதனை அட்டை உரிமையாளர் ஏற்றுக்கொள்கிறார்.

11.2 அட்டையினை உபயோகிப்பதன் மூலம், கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களில் அல்லது சேவைகளில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் அதற்கு வங்கி எந்த பொறுப்பினையும் ஏற்காது. அமைப்புடன், வர்த்தகர் அல்லது வேறு ஏதாவது வங்கியுடன் ஏற்படும் கோரிக்கை அல்லது முரண்பாடு என்பனவற்றை அந்த அமைப்பு, வர்த்தகர் வேறு ஏதாவது வங்கி என்பனவுடனேயே தீர்த்துக்கொள்ள வேண்டும். இதன்காரணமாக வங்கிக்கு மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகளை வழங்காமல் வைத்துக்கொள்ள முடியாது.

11.3 இந்த ஒப்பந்தத்திற்கு அமைய வங்கியினால் மேற்கொள்ளப்பட வேண்டிய கடப்பாடுகள், இயந்திர கோளாறு, தரவு செயற்பாட்டு முறைமை, இலத்திரனியல் பரிவர்த்தனை முறைமை அல்லது, மாறுபட்ட அல்லது வங்கினாலும் அதன் ஊழியர்களினாலும் அவர்களது, கட்டுப்பாட்டிற்கு அமைவான விடயங்கள் காரணமாக மேற்கொள்ள முடியாத நிலையில் அட்டை உரிமையாளர் வங்கியினை பொறுப்பாளியாக்க முடியாது.

12. மீட்பு

12.1 அட்டை உரிமையாளர் உரிய திகதியில் இந்த சட்ட திட்டங்களுக்கு அமைய கொடுப்பனவுகளை செலுத்த தவறும் பட்சத்தில் அட்டை உரிமையாளருக்கு அறிவுறுத்தல் எதுவும் இன்றி எந்த நேரத்திலும், அட்டை உரிமையாளரின், எந்த எந்த கிளையிலும் உள்ள நடைமுறை கணக்கு அல்லது சேமிப்பு கணக்கு அட்டை உரிமையாளரினால் எந்த விதமான கணக்கிலிருந்தும் வங்கிக்கு வழங்கப்பட வேண்டிய முழுத்தொகையினையும் பெறுவது குறித்து அட்டை உரிமையாளர் விசேட ஒப்புதலை தருகிறார்.

12.2 அட்டை உரிமையாளரினால், வங்கியின் எந்த கிளையிலும் பராமரிக்கப்படும் கணக்கில் இருந்து அட்டை உரிமையாளர் செலுத்த வேண்டிய பணத்தினை பெறுவதற்கான பரிந்துரையினை அட்டை உரிமையாளர் வழங்குகின்றார். அட்டை உரிமையாளரின் வங்கியின் அட்டைக்கணக்கிற்கு செலுத்த வேண்டிய முழுத்தொகையையும் அட்டை உரிமையாளரின் எந்த கிளை வங்கியிலும் வைப்புச் செய்யப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட தொகையில் இருந்து, அட்டைக் கணக்கிற்கு செலுத்த வேண்டிய முழுத்தொகையினையும் பெறலாம் என்ற உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

12.3 அட்டை உரிமையாளரின் நடவடிக்கைகள் காரணமாக வங்கியின் அட்டைக்கணக்கில் வரவேண்டிய நிலையில், அட்டை உரிமையாளரின் சொத்துக்களில் இருந்து பணத்தைப் பெறுவதனை ஏற்றுக் கொள்வதுடன் அதற்கான அனுமதியினையும் அவர் வழங்குவதுடன், அப்படியான நடவடிக்கைகளை வங்கி எடுப்பதற்கு ஏற்ற வகையில் அட்டை உரிமையாளர் உறுதி வழங்குகிறார்.

12.4 சட்டதிட்டங்களுக்கு அமைய அட்டை உரிமையாளர் கொடுப்பனவுகளை கொடுக்க தவறும் பட்சத்தில் வங்கி முழுவதுமான தனது தீர்மானத்திற்கு அமைய ஒப்பந்தத்தை தன்னிச்சையாக முடிவுக்கு கொண்டு வருவதுடன் ஒப்பந்தத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட எல்லா அட்டைகளையும் (மேலதிக அட்டைகள் உட்பட) ரத்து செய்ய முடியும். இந்த காரணங்களுக்காக அட்டை உரிமையாளரின் ஒப்பந்தம் நிறுத்தப்படும் பட்சத்தில் அப்படியான அட்டை உரிமையாளர் மீண்டும் ஒரு புதிய அட்டை ஒப்பந்தத்தை (பிரதம மற்றும் மேலதிக) வங்கியுடன் செய்து கொள்வதற்கான தகைமைகளை இழப்பதுடன், இந்த விடயம் குறித்து இலங்கை கடன் தகவல் பணியகத்திற்கு முறைப்பாடு ஒன்றும் மேற்கொள்ளப்படும்.

12.5 இந்த சட்டதிட்டங்களுக்கு அமைய அட்டை உரிமையாளர் தனது கொடுப்பனவுகளை வங்கிக்கு வழங்கத் தவறும் பட்சத்தில், 3 ம் தரப்பு சுதந்திரமான முகவர் ஒருவரை சேகரிக்கும் முகவராக சேவையில் ஈடுபடுத்துவதற்கும், அட்டை உரிமையாளரை நேரடியாக சந்தித்து நிலுவையில் உள்ள பணத்தை பெறுவதற்கான உத்வேகத்தை வழங்குவதற்குமான அனுமதியினை அட்டை உரிமையாளர் வங்கிக்கு வழங்குவதுடன், மூன்றாம் மற்றும் சுதந்திரமான ஒப்பந்தக்காரருக்கு தேவையான கடன் தகவல்கள், பரிவர்த்தனை நடவடிக்கைகள் மற்றும் கொடுபடவுள்ள தொகை குறித்த விபரங்களை வெளிப்படுத்தும் அனுமதி அட்டை உரிமையாளரினால் வங்கிக்கு வழங்கப்படுகிறது.

12.6 அட்டை உரிமையாளர் தொடர்ச்சியாக அட்டைக்கணக்கில் கொடுப்பனவாக உள்ள பணத்தை வழங்கத் தவறும் பட்சத்தில் பிரதம அட்டை உரிமையாளருக்கு (மேலதிக அட்டை உரிமையாளரும் இருப்பின் இணைந்தோ அல்லது மேலதிக அட்டை உரிமையாளருக்கும்) எதிராக அட்டைக்கணக்கில் நிலுவையில் உள்ள முழுத்தொகையினையும் பெறமுடியும் என்பதனை அட்டை உரிமையாளர் ஏற்றுக்கொள்கிறார்.

12.7 பணத்தை அறவிடுவதற்கான முகவருக்கான கொடுப்பனவு மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்கான பணத்தை அறவிடுவது தொடர்பாக, பணத்தை அறவிடும் முகவருக்கு அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான சகல செலவினங்கள் மற்றும் செலுத்தப்பட வேண்டிய நிலுவையில் உள்ள பணத்தை வழங்க வேண்டிய கடப்பாட்டை கொண்டுள்ளதனை அட்டை உரிமையாளர் ஏற்றுக்கொள்கிறார்.

13. வெளிப்படுத்தல்

13.1 அட்டைக் கணக்கின் கொடுப்பனவு தொகையினை கொடுப்பனவு செய்யத் தவறிய அட்டை உரிமையாளர்.·.உரிமையாளர்கள் உடனான ஒப்பந்தம் தன்னிச்சையாக ரத்து செய்யப்பட்ட அட்டை உரிமையாளருக்கு அறிவித்தோ அல்லது அறிவிக்காமலோ வங்கினால் மட்டுப்படுத்தப்பட்ட சேவைக்காக அமர்த்தப்பட்ட மூன்றாம் தரப்பிற்கும் இலங்கை கடன் தகவல் பணியகத்திற்கும், அட்டை உரிமையாளரின் அட்டைக் கணக்குகள் தொடர்பான தகவல்களை வங்கி வழங்கலாம்.

14. பொதுவானது

14.1 பிரதம அட்டை உரிமையாளரின் பெயர், முகவரி, தொழில் மற்றும் கையடக்க தொலைபேசி இலக்கம் போன்றவற்றில் மாற்றம் ஏதாவது ஏற்படின் அது குறித்து வங்கியின் அட்டை நிலையத்திற்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

14.2 அட்டை உரிமையாளரின் கொடுபடவேண்டிய முழுதொகையினையோ பகுதியினையோ வங்கியின் முழு தீர்மானத்திற்கு அமைய எந்த வகையிலும் மாற்ற பணியமர்த்த மற்றும் விற்பதற்கு வங்கி உரிமையை கொண்டுள்ளது.

14.3 பிரதம அட்டை உரிமையாளரின் எழுத்து மூலமான வேண்டுகோளுக்கு அமைய அவரின் கடனட்டையின் தரத்தை உயர்த்துவதுடன்.·.அல்லது கடன் வரையறையை அதிகரிப்பதோ வங்கியின் தீர்மானத்திற்கு அமைய மேற்கொள்ளப்படலாம்

14.4 வங்கி கேட்கும் பொழுதெல்லாம் அட்டை உரிமையாளர் அவரின் நிதி நிலைமை குறித்த தரவுகளை வழங்க வேண்டும். அத்துடன் வழங்கப்பட்ட தரவுகளை பரிசோதிப்பதற்கான அனுமதியினை வங்கிக்கு அட்டை உரிமையாளர் வழங்குகிறார். தரவுகள் கோரப்படும் போது அவற்றை வழங்காவிடின் வங்கியின் தீர்மானத்திற்கு அமைய அட்டையினை புதுப்பிக்க மறுக்கலாம் அல்லது அட்டையினை அந்த நேரத்தில் ரத்து செய்யலாம்.

15. அட்டையின் பாவனையை மீளப்பெறுதல்

15.1 எந்தநேரத்திலும் அட்டை வங்கிக்கு சொந்தமானதாகவே இருப்பதுடன், வங்கியின் உத்தரவிற்கு அமைய அட்டை உரிமையாளர் அதனை வங்கியிடம் ஒப்படைக்க வேண்டும். வங்கி அட்டையினை முன்னறிவித்தல் எதுவும் இன்றி ரத்து செய்யவோ முற்றுமுழுதாக அட்டையினை உபயோக உரிமையினையோ அல்லது குறிப்பிட்ட வசதிகள் வாய்ப்புக்களையோ அல்லது மீள விநியோகத்திற்கு மறுப்புத் தெரிவிக்கவோ, மீள புதுப்பிப்பதற்கோ மறுப்பு தெரிவிக்க முடியும்.

16. முடிவுறுத்தல்

16.1 அட்டை நிலையத்திற்கு எழுத்து மூலமான அறிவித்தல் மூலம் அட்டை உரிமையாளர் இந்த ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வரலாம், ஆனால் முடிவு அட்டை கணக்கின் கீழ் விநியோகிக்கப்பட்ட சகல அட்டைகளும் மீள கையளித்தல் மற்றும் இந்த ஒப்பந்தத்திற்கு அமைவாக சகல கொடுப்பனவுகளையும் அட்டை உரிமையாளர் செலுத்தியதன் பின்னரே ஒப்பந்தத்தை செயலிழக்க செய்ய முடியும்.

16.2 குடியேறுவதற்காக நாட்டை விட்டு அட்டை உரிமையாளர் வெளியேறும் பட்சத்தில் அட்டை (மேலதிக அட்டை ஏதாவது இருப்பின்) அவை வங்கியிடம் கையளிக்கப்பட வேண்டும்.

16.3 வெளிநாட்டு வேலைக்காக அட்டை உரிமையாளர் நாட்டை விட்டு வெளியேறும் பட்சத்தில் இலங்கையின் அந்நிய செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு அமைய அட்டையினை உபயோகிக்கலாம்.

16.4 அட்டை உரிமையாளர் இலங்கையின் அந்நிய செலாவணி கட்டுப்பாட்டு சட்ட முறைமைக்கு உட்படாத வங்கி வதிவிடமற்ற நிலையை பெறும் பட்சத்தில் வங்கிக்கு அவரின் அட்டையினை (மேலதிக அட்டைகள் உட்பட) ரத்து செய்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

16.5 இந்த ஒப்பந்தத்திற்கு அமைவான ஏதாவது காரணங்கள் காரணமாக ஒப்பந்தத்தை ரத்து செய்து அட்டையின் வசதிகளையும் ரத்து செய்ய முடியும்.

17. இந்த ஒப்பந்தத்தின் மாறுபாடு

17.1 இந்த ஒப்பந்தத்தினை எந்த நேரத்திலும் அல்லது எந்த நேரங்களிலும் வங்கி மாற்றம் செய்யலாம். எந்த அட்டை உரிமையாளரின் ஒப்பந்தத்தில் இதுமாதியான மாற்றம் ஏதாவது செய்திருந்தாலும் அல்லது செய்யாவிட்டாலும் மாற்றம் செய்யலாம். அப்படியான சகல மாற்றங்களும் அட்டை உரிமையாளருக்கு அறிவிக்கபடுவதுடன் இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்படும். மாற்றங்களை அட்டை உரிமையாளர் ஏற்றுக்கொள்ள தவறும் பட்சத்தில் ஒப்பந்தத்தினை முடிவிற்கு கொண்டு வருவதற்கான சுதந்திரம் முன்குறிப்பிடத்தக்கு அமைய உள்ளது. மாற்றம் செய்யப்பட்ட அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்று 10 நாள் காலப்பகுதியினுள் எழுத்து மூலம் அதனை அறிவிக்க வேண்டும்.

18. உத்தரவாதம்

18.1 அட்டை உரிமையாளர், தன்னுடைய அறிவுறுத்தல்களை எந்த விதமான சந்தர்ப்பங்களிலும், தொலைபேசி, டெலெக்ஸ் அல்லது பாக்ஸ் ஊடாக தெரிவிக்கும் போது, அது சம்பந்தமாக வங்கி, நல்ல நம்பிக்கையுடன் எடுக்கும் நடைமுறை காரணமாக எந்தவிதமான தவறுகளிலும் இருந்தோ அல்லது குறைபாடுகளில் இருந்தோ விடுவிப்பதாக வங்கிக்கு உத்தரவாதத்தை அட்டை உரிமையாளர் வழங்குகிறார்.

18.2 வங்கி சொல்லப்பட்ட நிபந்தனைகளை அமுல் படுத்தும் போது வங்கிக்கு ஏற்படும் கடற்பாடு, நட்டம், பாதிப்பு, செலவீனங்கள் (சட்ட செலவீனமோ அல்லது ஏனையவையோ) என்பனவற்றை அட்டை உரிமையாளர் ஏற்பதுடன் அதற்கான உத்தரவாதத்தினையும் வங்கிக்கு வழங்குகிறார்.

19. அறிவுறுத்தல்கள்

19.1 பிரதான அட்டை உரிமையாளரினால் இறுதியாக வங்கிக்கு வழங்கப்பட்ட முகவரிக்கே, சகல எழுத்து மூலமான அறிவுறுத்தல்களும் அஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதுடன் அவை அஞ்சலில் இடப்பட்ட நேரத்தில் இருந்து 48 மணி நேரத்தினுள், அட்டை உரிமையாளருக்கு கிடைத்துள்ளதாக கருதப்படும். அதற்கு மேலாக, சகல பொது அறிவுறுத்தல்களும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும்.

20. செயல்படும் அதிகார சட்டம்

20.1 இந்த ஒப்பந்தம் செயல்பாட்டில் உள்ள அதிகார சட்டத்திற்கு அமையவும், இலங்கை ஜனநாயக சோசலிச சட்டங்களுக்கு அமைந்த முறையில் விளக்கப்பட்டதற்கு அமையவும் செயல்படும்.

21. குற்றச்செயல்கள்

21.1 அட்டை உரிமையாளர், இலங்கையின் சட்டங்களுக்கு எதிராகவோ அல்லது இலங்கை சட்டங்களை பாதிக்கும் வகையில் அட்டையினை உபயோகிக்கும் பட்சத்தில், வங்கி தனது முழுமையான தீர்மானத்திற்கு அமைய இந்த ஒப்பந்தத்தை முடிவிற்கு கொண்டு வருவதுடன், அட்டை உரிமையாளருக்கு விநியோகித்த சகல அட்டைகளையும் ரத்து செய்ய முடியும். அத்துடன், அப்படியான சட்ட விரோத நடவடிக்கைகள்.·.பரிவர்தனை நடவடிக்கைகள் குறித்த முழு விபரங்களுடன் இலங்கை மத்திய வங்கிக்கு முறையிடப்படும்.

எங்கள் ஒப்பந்தம்

கீழே கையொப்பம் இடுவதன் மூலம் நான்/நாங்கள் **HNB PLC** - வீசா/மாஸ்டர் அட்டைக்கணக்கு எனக்கு/எங்களுக்கு திறக்கப்படவேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்படுவதுடன் எனக்கு/எங்களுக்கு வழங்கப்பட்ட அட்டையினை அரைவாசியாக வெட்டி அதன் இரண்டு அரைவாசிகளையும் தங்களுக்கு அனுப்பி அட்டையினை உபயோகிக்கும் உரிமையினை சரணடையும் வரையில் வழங்கப்பட்ட அட்டையினை/அட்டைகளை புதுப்பிக்க அல்லது மாற்ற வேண்டுகோள் விடுக்கின்றேன்/விடுக்கின்றோம். தங்களுக்கு, காலத்திற்கு காலம் தேவைப்படும் தகவல்களை எனக்கு/எங்களுக்கு தெரிவிக்காமலேயே பிரதிநிதிகள் பெறும் வகையில் நான்/நாங்கள் இத்தால் எனது/எங்களது வங்கிக்கு அல்லது மூல உரிமையினை நான் /நாம் வழங்குகின்றோம். மேலே விபரமாக தெரிவிக்கப்பட்டுள்ள கடன் அட்டை பாவனை குறித்த ஒப்பந்தத்தின் சட்டத் திட்டங்களை நான்/நாங்கள் ஏற்றுக்கொள்கிறேன்/ஏற்றுக்கொள்கிறோம். எனது/எங்கள் வேண்டுகோளுக்கு அமைய வழங்கப்பட்ட பிரதம மற்றும் மேலதிக அட்டை/அட்டைகள் என்பனவற்றிற்கான கட்டணங்களையும் இணைத்து வழங்க ஒப்புதல் தரப்படுகிறது. அத்துடன், நான்/நாங்கள் மேலதிக அட்டை உறுப்பினரும், சொல்லப்பட்ட கடன் அட்டை உபயோகத்தின் சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டவர் என்பதுடன் அந்த அட்டைக்கான சகல கட்டணங்களுக்கும் பொறுப்பானவர் என்பதனை நான்/ நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானது மற்றும் சரியானது என்பதனை நான்/நாங்கள் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

மேலே குறிப்பிட்ட பாவனை ஒப்பந்தம் தொடர்பான சட்டத்திட்டங்களை நான்/நாங்கள் விளங்கிக்கொண்டோம்.

திகதி	மாதம்	வருடம்	.... பிரதம அட்டை விண்ணப்பதாரியின் கையொப்பம்
திகதி	மாதம்	வருடம்	.... மேலதிக அட்டை விண்ணப்பதாரியின் கையொப்பம்

சட்ட பூர்வமான தேவைகள்

இலங்கை மத்திய வங்கியின், அந்நிய செலவாணி கட்டுப்பாட்டாளருக்கான உறுதிப்பாடு.

நான்/நாங்கள்..

(மேலதிக அட்டை விண்ணப்பதாரி)..

....

என்னால்/எங்களால் இந்த விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட சகல தகவல்களும் உண்மையானதும், சரியானதும் என, இத்தால் உறுதிப்படுத்தப்படுகிறது.

நான்/நாங்கள் 2005 செப்டம்பர் 19ம் திகதிய விசேட வர்த்தமானி இலக்கம் 1411/5 இல் பிரசுரிக்கப்பட்ட செலவாணிக் கட்டுப்பாட்டு சட்டத்தில் அமுலாக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் குறித்து நான்/நாங்கள் அறிவோம் என்பதுடன் **HNB PLC** இனால் வழங்கப்பட்ட அட்டை, வெளிநாட்டு அந்நிய செலவாணி பரிவர்தனை நடவடிக்கைகளை, செலவாணி கட்டுப்பாட்டு சட்டத்துக்கு அமையும் என்பதனை நான்/நாங்கள் உறுதிப் படுத்துகிறோம்.

இலங்கையை விட்டு நான் /நாங்கள் குடியகலும் போதோ அல்லது வெளியேறும் போதோ **HNB PLC** இடம் அட்டை/அட்டைகளை கையளிக்க நான்/நாங்கள் உறுதிப்படுத்துகிறேன்/உறுதியளிக்கின்றோம், என்பதனையும் உறுதிப்படுத்துகிறேன/உறுதிப்படுத்துகிறோம்.

எனக்கு/எங்களுக்கு வழங்கப்பட்ட EFCT மூலம் அனுமதியற்ற நிலையில் வெளிநாட்டு நாணய பரிவர்தனை நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கலாம் என்பதற்கான காரணங்கள் மூலம் சந்தேகம் ஏற்படும் நிலையில், EFCT இல் உள்ள வெளிநாட்டு செலவானியினை முடக்க உத்தரவாதம் அளிக்கப்பட்ட முகவர் வேண்டப்படுவார் என்பதனை நான்/நாங்கள் அறிகிறேன்/அறிகின்றோம்.

திகதி	மாதம்	வருடம்	.... பிரதம அட்டை விண்ணப்பதாரியின் கையொப்பம்
திகதி	மாதம்	வருடம்	.... மேலதிக அட்டை விண்ணப்பதாரியின் கையொப்பம்

கிளையின் உபயோகத்திற்கு மாத்திரம்

அறிமுகப்படுத்தியது	சே.லா.நி இல
கையொப்பம்	கிளை/பிரிவு குறி
வரையறை	

விரிவுபடுத்தப்பட்ட தகவல்கள்

வருடாந்த வருமானம்	ஏனைய வருமானம் (வருடாந்தர)
HNBல் உள்ள கணக்குகள்	வயது
தொழில் / வியாபாரம்	

தகவல் சரிபார்த்தவர்
பெயர்/கையொப்பம

CRIB தகவல்களை
சரி பார்த்தவர் (பெயர்/கையொப்பம்)

வங்கியின் பாவனைக்காக

நான்...

(அதிகாரியின் பெயர்)..

(அட்டை விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் மேலதிக அட்டை விண்ணப்பதாரியின் பெயர்) இனால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் தொடர்பான சம்பந்தப்பட்ட ஆவனங்களை நன்கு பரீட்சித்ததில், சொல்லப்பட்ட தகவல்கள் மற்றும் ஆவனங்கள் செலவாணி கட்டுப்பாட்டு தேவைகளையும் வங்கியின் உள்ளக கொள்கைகளுக்கும் அமைய உள்ளது குறித்து நான் திருப்தி அடைந்துள்ளேன்.

....
திகதி உத்தரவாதம் பெற்ற கிளை அதிகரியின் கையொப்பம்

அட்டை நிலையப் பாவணைக்கு மட்டும்.

EFCT மூலம் அட்டை உரிமையாளர் வெளிநாட்டு பரிவதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, வங்கி அக்கறையுடன் செயற்படுவதற்கான பொறுப்பினை ஏற்பதுடன், அட்டை உரிமையாளரினால் வழங்கப்பட்ட உறுதி மொழிக்கு மாறாக, **EFCT** மூலம் அத்தாட்சி படாத வகையில் அந்நிய செலவாணி பரிவர்தனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நியாயபூர்மான சந்தேகங்கள் ஏற்படும் பட்சத்தில், **EFCT** இல் உள்ள வெளிநாட்டு அந்நிய செலவாணியினை இடை நிறுத்துவதுடன் இந்த விடயம் குறித்து, செலவாணி கட்டுப்பாட்டாளருக்கும் அறிவிக்கப்படும்.

....
திகதி உத்தரவாதம் பெற்ற கிளை அதிகரியின் கையொப்பம்

கடன் அட்டை இலக்கம்
பிரதான

மேலதிக

வழங்கும் அதிகாரி

வேலைக்கிரமம்,	அத்தாட்சி படுத்துபவர்	கணக்காய்வு

CREDIT CARD APPLICATION FORM

HNB

HNB உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

கடன் அட்டை இல்லத்திற்கு உங்களை வரவேற்கிறோம்!

இதற்கு முன்னர் இவ்வளவு அதிகமான விடயங்கள் எந்த கடன் அட்டையிலும் உள்ளடக்கப்படவில்லை. எச்.என்.பி. இடம் இருந்து பெறப்படும் கடன் அட்டையில், தெரியாத இல்லாத முழு அளவிலான சிறப்புரிமையுடனான வலுவான மற்றும் சகல வசதிகளும் உள்ளதை நீங்கள் காண்பீர்கள்.

வாருங்கள் நாங்கள் உங்களுக்கு மனமகிழ்ச்சியை தருகின்றோம்.

- இலவச வெளிநாட்டு மருத்துவ, விபத்து மற்றும் பயண காப்புறுதி.
- சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ சிகிச்சைக்களுக்கான தள்ளுபடியுடனான காப்புறுதிக் கட்டணம்.
- தனிப்பட்ட விபத்துக்களுக்கான இலவச காப்புறுதி சேவை (ரூபா 50,000/= இல் இருந்து ஆரம்பம்)
- இலவச துரித குறுஞ் செய்திச் சேவை
- இலவச மேலதிக அட்டைகள்
- சித்திர அட்டைகள் மற்றும் புகைப்பட அட்டைகள்
- வாடிக்கையாளர்களுக்கான 24 மணி நேர சேவை (துரித தொடர்பிற்கு 4523523)
- பல்வினை கட்டண மீள் சுழற்சி (தேர்ந்தெடுக்கலாம் 09ஆம் 19ஆம் 24ஆம் மற்றும் மாத இறுதி)
- விரும்பிய முறைமைக்கு அமைவான 5% முதல் 100% வரையான மாறுபட்ட கொடுப்பனவு, உங்கள் எச்.என்.பி. கணக்கில் இலவச மாதாந்த நிலையியற் கட்டளைகள் (ஆகக் குறைந்த கொடுப்பனவிற்கு அமைய)
- எமது வாடிக்கையாளர் சேவை நிலையங்களின் ஊடாக பணமாகவோ அல்லது காசோலையாகவோ கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் வசதி
- கடன் அட்டை கொடுப்பனவுகளை மீள செலுத்துவதற்கான உத்தரவாத தள்ளுபடியுடனான காப்புறுதிக் கட்டணங்கள்.
- ஆகக் குறைந்த வட்டி அற்ற காலமாக 25 நாட்களும், ஆகக் கூடிய நாட்களாக 55 நாட்களும்
- உடனடிப் பணம் - உங்கள் கடன் அட்டையின் வரையறைக்கு அமைவாக 50% வரை
- ஒரு அலுவலக நாளினுள் ஈடுசெய்யும் புதிய அட்டை
- பூஜ்ய % வட்டி
- பலவகையான உணவகங்கள், உணவுவிடுதிகள் மற்றும் நாடளாவிய ரீதியா உள்ள சில்லறை வர்த்தக நிலையங்களின் மூலமான எப்போதும் இல்லாத வகையிலான சிறந்த விலைக் கழிவுகள்.
- வாடிக்கையாளர் விசுவாசத் திட்டங்கள்

எமது கட்டணங்கள் மற்றும் கொடுப்பனவுகள்

	இணைவதற்கான கட்டணம் (ரூபா)	வருடாந்த கட்டண்ம் (ரூபா)
சர்வதேச பழைய/வழமையான 50,000 ரூபாவிற்கும் குறைந்த வரையறை 50,000 ரூபாவிற்கு அதிகமான வரையறை	500/- -	1,000/- 1,000/-
சர்வதேச தங்கம் அட்டை	-	1,500/-
சர்வதேச பிளாட்டினம்	-	3,000/-
உள்ளூர் தங்கம் (மாஸ்டர் அட்டைக்கு மட்டும்)	-	1,000/-
சர்வதேச உறவுடனான அட்டைகள் (குறைந்தளவு)	-	1,000/-

பண முற்கொடுப்பனவு கட்டணம்	3%
எரிபொருளுக்கான கட்டணம்	2%
காலதாமத கொடுப்பனவுகள் குறைந்தளவு	750 ரூபா
வரையறைக்கு மேற்பட்ட கட்டணம் குறைந்தளவு	500 ரூபா

வேண்டுகோளுக்கு அமைய, இந்த விண்ணப்ப படிவம் மற்றும் கடன் அட்டைக்கான ஒப்பந்த நிபந்தனைகள் என்பனவற்றை சிங்களம் மற்றும் தமிழிலும் பெறலாம்

நான் கோர விரும்புவது விசா ☐ மாஸ்டர் காட் ☐

உறவு/உப வர்த்தக குறியீடு தயவு செய்து உற்பத்தியினை குறிப்பிடவும்............ உறுப்பினர் இல ....
(For Affinity only)

தயவு செய்து இந்த விண்ணப்ப படிவத்தை தெளிவான பெரிய எழுத்தில் பூர்த்தி செய்யவும். போதிய தகவல்களை தர தவறும் பட்சத்தில், அட்டை தயாரிக்கும் பணிகள் காலதாமதமாகலாம். அட்டையினை வழங்குவதற்கு முன்னர், வழங்கப்பட்ட தகவல்கள் உறுதிப்படுத்தப்படும்.

நீங்கள் விரும்பும் கொடுப்பனவிற்கான திகதி ☐ 4ஆம ☐ 13ஆம ☐ 19ஆம ☐ 25ஆம
(உங்களது பட்டியல் திகதியில் இருந்து 25 நாட்களில் கொடுப்பனவுத் திகதி அமையும், என்பதுடன் விடுமுறை நாட்களுக்கு அமைய அது மாறுபடலாம்)

உங்களைப் பற்றிய தகவல்களை எங்களுக்கு தெரிவியுங்கள்

திரு/திருமதி/செல்வி/வணக்கத்திற்கு உரிய/கலாநிதி/ஏனையவை ....

பால்: ☐ ஆண் ☐ பெண் குடியியல் நிலை: ☐ தனியானவர் ☐ திருமணமானவர் ☐ தாரம் இழந்தவர் ☐ விவாகரத்த பெற்றவர்

கடைசிப் பெயர்: ....

முதல் பெயர்: ....

நடுப் பெயர்: ....

அட்டையில் குறிப்பிடப்பட வேண்டிய பெயர் (ஆங்கிலத்தில்)(பெயர் மற்றும் இடைவெளி உட்பட ஆகக் கூடியது 18 எழுத்துக்கள்

☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

தாயாரின் கன்னிப் பெயர்: ....
(பாதுகாப்பு காரணங்களுக்காக)

தேசிய இனம்: .... பிறந்த திகதி ☐☐ ☐☐ ☐☐☐☐
திகதி மாதம் வ ரு ட ம்

குடியிருப்பாளர் ☐ புலம்பெயர்ந்தவர் ☐

தே.அ.அ. (கட்டாயமானது): ....
(தயவு செய்து புகைப்பட பிரதியினை இணைக்கவும்)

Bills / Correspondence to be sent to: ☐ Office ☐ Residence

Home Address: ....

....

....

Residence: ☐ Own ☐ Rented ☐ Parent's ☐ Mortgaged

Monthly Rental / Loan Instalment: .... Period at Above Address (yrs): ....

Residence Tel: .... Mobile: ....

Email: .... No. of Dependents: ....

Professional Qualifications: ....

....

Special Achievements (in sports / public office etc.): ....

....

Name of a relative not living with you: ....

....

His / Her Address: ....

....

Relationship: .... Relative's Office Tel: ....

Res: .... Mobile: ....

தொழில் நிலைமை

☐ அரசாங்கம்/பொதுத்துறை ☐ தனியார் துறை

☐ சுய தொழில் ☐ ஓய்வு பெற்றவர்

வியாபாரத்தின் அல்லது வேலை கொள்ளுனரின் பெயரும் முகவரியும்:

....

....

....

....

Business Tel: .... (Ext: ....) Fax: .... Email: ....

Nature of Business of the Company: ....

Designation: ....

Period of service with present employer / company: ....

முந்தைய தொழில் வழங்குனர்/வழங்குனர்கள	காலம்	தொ.இல.
1.	....	....
2.	....	....
3.	....	....

உங்கள் வருமானம்

உங்கள் வருடாந்தர வேதனம் அல்லது சுயதொழில் மூலமான வருமானம் ரூபா..............................
(தயவு செய்து அண்மைய வேதன பட்டியல் அல்லது உங்கள் வருமானத்தை நிரூபிக்கும் ஆவணம்)

ஏனைய வருமானம் (வருடாந்தர)..............................

மூலம்:.................. ரூபா..................

உங்களின் வாழ்க்கைத் துணையின் வருடாந்தர வருமானம் (திருமணம் ஆகியிருந்தால்)

மூலம்:.................. ரூபா..................

உங்கள் சொத்து விபரம்

காணி/கட்டடம்	பெறுமதி (ரூபா)	வாகன ரகம் மற்றும் இலக்கம்	பெறுமதி (ரூபா)	வைப்புக்கள்/பங்குகள்	பெறுமதி (ரூபா)

ஏனையவை (விபரிக்கவும்):..............................

உங்கள் HNB பங்குத் தொடரின் இலக்கம் (பொருந்துமானால்)..............................

நிதி தொடர்பு

வங்கி/கிளை	ரகம்	கணக்கு இலக்கம்
....	....	....
....	....	....
....	....	....

உங்கள் நிதி பொறுப்புக்கள்

வங்கி/நிதி நிறுவனம்	மாதாந்தர கொடுப்பனவு	நிலுவை
1.	....	....
2.	....	....
3.	....	....
4.	....	....

ஏனைய கடன் அட்டைகள்	கடன் வரையறை
☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐	....
☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐	....
☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐	....

மிகவும் முக்கியமானது

செயல்பாட்டை துரிதப்படுத்த தங்களின் வருமானம் குறித்த தகவல்களை உறுதிப்படுத்தும் வகையில் பின்வரும் ஆவணங்களை தயவு செய்து இணைக்கவும்.

1. உங்களின் வேலை கொள்பவரால் அண்மையில் வழங்கப்பட்ட வேதன பட்டியல் (கடந்த 3 மாதங்களுக்கானது) இன் மூலப் பிரதிகள் அல்லது அத்தாட்சிப் படுத்திய பிரதிகள்
2. சுயதொழில் செய்பவர்கள்.
   - வியாபார பதிவுப் பத்திரம் மற்றும் கடந்த ஆறு மாத காலங்களுக்கான வங்கி பட்டியல்.
   - கடந்த இரண்டு வருடங்களுக்கான கணக்காய்வு செய்து அத்தாட்சிப் படுத்தப்பட்ட கணக்கு அறிக்கை.
   - வருமான வரி கொடுப்பனவு தொடர்பான ஆவணம் அல்லது வருமானத்திற்கான ஏனைய சான்றுகள்.

மேல் குறிப்பிடப்பட்ட தகவல்கள் தவறாக காணப்படும் பட்சத்தில், எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதுடன், கடன் அட்டை வழங்கப்பட்டதன் பின்னர் அப்படியான தவறுகள் கண்டு பிடிக்கப்படும் போது, அடுத்த பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளதும், நான் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் என்னால் நன்கு வாசிக்கப்பட்டு விளங்கிக் கொண்டதுமான கடன் அட்டை நிபந்தனைகளுக்கு அமைய கடன் அட்டை ரத்து செய்யப்படலாம் என்பதனை நன்கு அறிவேன்.

மேலதிக அட்டைக்கான விண்ணப்பதாரி

இந்த படிவத்தின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரியின் (அதாவது பிரதம விண்ணப்பதாரி) நேரடியான குடும்ப அங்கத்தவர்களுக்கு மேலதிக அட்டைகள் (மேலதிக அட்டைகள்) வழங்கப்படும். அடுத்த பக்கத்தில் விபரமாக தெரிவிக்கப்பட்டுள்ள கடன் அட்டை ஒப்பந்தத்திற்கு அமைவாக பிரதம விண்ணப்பதாரியினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு மேலதிக அட்டை உரிமையாளரும் கட்டுப்பட்டவராவர்.

திரு/திருமதி/செல்வி/வணக்கத்திற்கு உரிய/கலாநிதி/ஏனையவை..............................

பால்: ☐ ஆ ☐ பெ குடியுரிமை: ☐ தனி ☐ திருமணமானவர் ☐ தாரமிழந்தவர் ☐ விவாகரத்து பெற்றவர்

மேலதிக அட்டை விண்ணப்பதாரியின் முழுப் பெயர்:

....

அட்டையில் குறிப்பிடப்பட வேண்டிய பெயர் (தலைப்பு மற்றும் இடைவெளி என்பனவற்றுடன் ஆகக் கூடியது 18 எழுத்துக்கள்)

☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

Relationship to Principal Applicant: ....

Home Address: ....

Nationality: .... Date of Birth: ☐☐ ☐☐ ☐☐☐☐
D D M M Y Y Y Y

தே.அ.அ. (கட்டாயமானது)..............................(போட்டோ கொப்பி இணைக்கவும்)

வீட்டு தொலைபேசி .... கையடக்க தொலைபேசி..................

மின்னஞ்சல் முகவரி .... அலுவலக தொலை ....

வியாபாரத்தின் அல்லது தொழில் வழங்குனரின் பெயரும் முகவரியும்

....

....

பதவி..............................

பணியாற்றும் காலம் ☐☐ வருடங்கள் ☐☐ மாதங்கள்

மேலதிக விண்ணப்பதாரியின் வருடாந்தர வேதனம் ....
தொழில் வழங்குனரால் வழங்கப்பட்ட அண்மைய வேதன பட்டியலின் மூல பிரதியை இணைக்கவும். சுய தொழில் புரிபவராகின் பிரதான விண்ணப்பதாரிக்கு தெரிவிக்கப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்கவும்.

தெரிவு காப்புறுதி

- கடன் அட்டை மீள்கொடுப்பனவு உத்தரவாத சலுகையுடனான காப்புறுதிக் கட்டணம்
  தயவு செய்து மேலதிக தகவல்கள் மற்றும் பிரேரணைப் படிவம் ஒன்றையும் எனக்கு அனுப்பி வைக்கவும் ☐
- சத்திரசிகிச்சை மற்றும் மருத்துவ அனுமதி, சலுகையுடனான காப்புறுதி கட்டணம்.
  தயவு செய்து மேலதிக தகவல்கள் மற்றும் பிரேரணைப் படிவம் ஒன்றையும் எனக்கு அனுப்பி வைக்கவும். ☐

குறுஞ்செய்தி துரித சேவை - இலவசமாக வழங்கப்படுகிறது (வலுவாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது)

குறுஞ்செய்தி துரிதசேவை : ஒவ்வொரு நடவடிக்கைகளும் இடம்பெறும் பொழுதும் அட்டையின் உரிமையாளருக்கு இடம், தொகை, திகதி மற்றும் நேரம் என்பன காட்டப்படுவதுடன், செயல்பாடுகளின் பின்னர் மிகுதி தொகை தொடர்பான விபரங்கள் தெரிவிக்கப்படும். இந்த சேவையினை விண்ணப்பதாரி பெறுவது குறித்து வலுவாக பரிந்துரை செய்யப்படுகிறார். இதன் மூலம் அட்டை களவாடப்படும் பொழுதோ அல்லது காணாமல் போகும் பொழுதோ ஒழுங்கீனமான நடவடிக்கைகள் மற்றும் பிழையான வகையில் பாவனைக்கு உட்படுத்த முடியாத வகையில் எச்சரிக்கையினைப் பெற முடியும். இந்த சேவையினைப் பெறாத அட்டையின் உரிமையாளர்கள், அட்டை களவாடப்படும் போது அபாயம் ஏற்படக் கூடிய நிலையினை எதிர்கொள்ள வேண்டிவரும். எப்படியிருப்பினும் அட்டையின் உரிமையாளர்கள் குறுஞ்செய்தியினை, வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பால்பட்ட காரணங்கள் காரணமாக பெறத்தவறும் பட்சத்தில் அதன் மூலம் அட்டையின் உரிமையாளர் எதிர்நோக்கக் கூடிய நட்டம் அல்லது பாதிப்புகளுக்கு வங்கி பொறுப்பினை ஏற்காது.

ஆம், எனக்கு இந்த சேவை தேவைப்படுகிறது ☐ இல்லை, எனக்கு இந்த சேவை தேவையில்லை ☐

குறுஞ்செய்தி துரித சேவைக்கான கையடக்க தொலைபேசி இலக்கம் ☐☐☐☐☐☐☐☐☐☐

விரிவாக்கல் தொடர்பான குறுஞ்செய்தி அனுப்பப்படுவது குறித்து எனக்கு ஆட்சேபனை இல்லை. ☐

குறுஞ்செய்தி வங்கிச் சேவை மற்றும் இலத்திரனியல் வங்கிச் சேவை

ஏற்கனவே HNB இலத்திரனியல் வங்கிச் சேவையினைப் பெற்றுள்ளீர்களா? ☐ ஆம் ☐ இல்லை

அப்படிப் பெற்றிருப்பின் உங்கள் இணைய கணக்கு இலக்கம் ☐
(பாவனையாளரின் பெயர் மற்றும் இரகசிய சொல்லை இங்கு வெளிப்படுத்த வேண்டாம்)

இந்த சேவையினைப் பெறவில்லை எனில் குறுஞ்செய்தி வங்கிச் சேவை மற்றும் இலத்திரனியல் வங்கிச் சேவைகளை உங்கள் கடன் அட்டையில் பெற விரும்புகிறீர்களா?

☐ ஆம் ☐ இல்லை

நிலையான கட்டளை அறிவுறுத்தல்

எனது அட்டையின் மிகுதித் தொகையினை எனது HNB கணக்கின் ஊடாக செலுத்த விரும்புகிறேன்.
☐ ஆம் ☐ இல்லை

ஆம் எனில், மாதம் .... % செலுத்தவும் (ஆகக் குறைந்தது 5% முதல் 100% வரை) ஆகக் குறைந்த கொடுப்பனவிற்கு அமைவாக

Account Number .... Branch..................

For Bank Use Only

Standing order instructions verified.

....

Branch Confirmation

உங்கள் PIN (த.அ.இ)

பாதுகாப்பு காரணங்களுக்காகஇ தனிப்பட்ட அடையாள இலக்கம் / இலக்கங்களை (PIN) பட்டியலிடும். முகவரிக்கு அஞ்சல் மூலம் மட்டுமே அனுப்பி வைக்கப்படும்.

கடன் அட்டை உரிமையாளருக்கும் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. (பீ.கியூ 82) இற்கும் இடையேயான ஒப்பந்தம்.

1. விவரணம்

வங்கிக்கும், அட்டை உரிமையாளருக்கும் இடையேயான இந்த ஒப்பந்தத்தின் கருத்தானது, அதன் நிபந்தனைகள் காலத்திற்குக் காலம் மாறுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அட்டை என்பதன் கருத்து, பிரதான அட்டை உரிமையாளருக்கும் மேலதிக அட்டை உரிமையாளர்களுக்கும் **HNB PLC** இனால் வழங்கப்படும் கடன் அட்டைகளைக் குறிக்கின்றது. பிரதம அட்டை உரிமையாளர் என்பதன் கருத்தானது, பிரதம அட்டை உரிமையாளர் பெயரில் அட்டைக் கணக்கைகொன்றைக் கொண்டுள்ள அவரின் வாரிசுகள், அதனை நிறைவேற்ற அல்லது நிர்வகிப்பதற்கான உரித்தைப் பெற்றவர்களாவர். மேலதிக அட்டை உரிமையாளர் என்பது பிரதம அட்டை உரிமையாளரால் நியமிக்கப்பட்ட மற்றும் அவரின் வாரிசுகள், பரிவர்தனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உரித்தைக் கொண்டவர்கள். வங்கி என்பது **HNB PLC**, அதன் நியமனத்தைப் பெற்றவர்கள் மற்றும் அவர்களின் உரித்தைப் பெற்றவர்கள். அட்டைக் கணக்கு என்பது அட்டை நிலையத்தினால், அட்டையின் பரிவர்தனை நடவடிக்கைகள் குறித்து வங்கியினால் பராமரிக்கப்படும் கணக்கு. அட்டை நிலையம் என்பது கொழும்பு 10, 479, ரி.பி. ஜயா மாவத்தை, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி. இன் தலைமைக் காரியாலயத்தின் அட்டை பிரிவு அல்லது இணைய தளத்தில் அறிவிக்கப்படும் இடங்கள். அட்டை உரிமையாளர் என்பது இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைக்கு அமைய வங்கியினால், விநியோகிக்கப்பட்ட அட்டையினை உபயோகிக்கும் பிரதம அட்டை உரிமையாளர் மற்றும் முன்னெடுத்துச் செல்வதற்கு பணிக்கப்பட்டவர்கள் அல்லது நிர்வகிக்க பணிக்கப்பட்டவர்களும் உள்ளடங்குவர். அட்டை பரிவர்தனை நடவடிக்கைகள் பொருட்களை வழங்குவதற்கு அல்லது சேவைகளைப் பெறுவதற்கு அல்லது பண முற்பணங்களை அட்டையின் இலக்கத்தை அல்லது அட்டை உரிமையாளரின் கணக்கில் வரவு வைக்கும் வகையில் அனுமதிக்கப்பட்ட பரிவர்தனை நடவடிக்கைகள் மூலம் வர்த்தகர்களுக்கு வழங்குவதைக் குறிக்கும். நேரடி குடும்ப அங்கத்தவர்கள் என்பது அட்டை உரிமையாளரின் மனைவி, அவரின் பராமரிப்பில் உள்ள 18 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகள் அல்லது அட்டை உரிமையாளரின் பெற்றோர் ஆகியோரைக் குறிக்கும். வர்த்தகர் என்பது அட்டையின் மூலம் பொருட்களை அல்லது சேவைகளை வழங்குவதற்காக வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நபர் அல்லது நிறுவனம். அட்டையின் வரையறை காலத்திற்கு காலம், பிரதம அட்டை உரிமையா-ளரின அட்டைக் கணக்கில், தீர்மானிக்கப்பட்டு வங்கியினால் அறிவுறுத்தப்படும் ஆகக் கூடிய ஒன்று சேர்க்கப்பட்ட தொகை. **PIN** அட்டை உரிமையாளருக்கு வழங்கப்படும் தனிப்பட்ட அடையாளத்தைக் கொண்டதும், இரகசியமானதுமான இலக்கம். கொடுப்பனவுத் திகதி அட்டையினை உபயோகிப்பதன் மூலம் நிலுவையில் உள்ள முழுத்தொகையையோ அல்லது அவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய குறைந்த தொகையினை செலுத்த வேண்டியதற்காக ஒவ்வொரு மாதமும் வங்கியினால் மேற்கொள்ளப்படும் தீர்மாத்திற்கு அமைய பிரதம அட்டை உரிமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டதும், இணையத் தளத்தில் பிரசுரிப்பதுமான திகதி **HNB ATM** என்பது, ஹற்றன் நஷனல் வங்கியினால் தானாக செயல்படும் இயந்திரம் இணையத்தளம் **www.hnb.net** (அல்லது காலத்திற்குக் காலம் அட்டை உரிமையாளருக்கு அறிவுறுத்தப்படும் வகையிலான வங்கியினால் பராமரிக்கப்படும் மற்ற இணையத்தளங்கள்) என்பது உத்தியோகபூர்வ இணையத்தளம் என்பதுடன், அதில் சகல அட்டை தொடர்பான பொது அறிவித்தல்களும் பிரசுரிக்கப்படுவது.

2. அட்டையினை உபயோகித்தல்

2.1 அட்டையினைப் பெறும்போது அட்டை உரிமையாளர் கையொப்பம் இட்டு பெறுவதுடன், அவர் மட்டுமே அதனை உபயோகிக்க வேண்டும்.

i. அட்டை உரிமையாளரின் சட்ட நடவடிக்கைகளுக்காக.

ii. உபயோகிப்பது ஒப்பந்தத்தின் தற்போதைய நிபந்தனைகளுக்கு அமைய.

iii. அட்டையின் வரையறைத் தொகைக்குள் (அட்டையின் வரையறைத் தொகைக்கு அதிகமானவை உடனடியாக வங்கிக்கு செலுத்த வேண்டும், என்பதுடன், கடன் வரையறைக்கு மேல் தொகை கூடியுள்ளதா என்பதனை பரிசோதிக்க வேண்டும். அட்டை பரிவர்தனை நடவடிக்கையின் மூலம் அட்டையின் கணக்கில் இதுவரை வரவு வைக்கப்படாத தொகையினை வங்கிக் கணக்கில் வைப்புச் செய்வதுடன், சொல்லப்பட்ட அட்டை பரிவர்தனை நடவடிக்கையின் மூலம் மூன்றாம் தரப்பிற்கு அனுமதிக்கப்பட்டமை)

iv. செல்லுபடியாகும் காலப்பகுதியினில், அட்டையின் தொகை பெருகுதல்

v. EFT மூலம் வெளிநாட்டு நாணய பரிவர்தனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தேவை ஏற்படின், அந்நிய செலவாணிக் கட்டுப்பாட்டு திணைக்களத்தின் சட்டங்களுக்கு அமைய அந்நிய செலவாணி திணைக்களத்தின் அனுமதியினைப் பெற வேண்டும்.

vi. அந்நிய செலவாணி கட்டுப்பாட்டுச் சட்டம், பணிப்புரை அல்லது வழிகாட்டு முறைமைகளில் விபரிக்கப்பட்டதற்கு அமைவாக, அட்டை உரிமையாளர் கடன் அட்டையினை உபயோகித்து ஏதாவது காணியினையோ, ஏதாவது ஆதனத்தையோ மாதந்தர அடிப்படையில், ஆதனங்களையோ அல்லது மூலதன கணக்கு பரிவர்த்தனை நடவடிக்கைகளையோ மேற்கொள்ளக் கூடாது.

3. அட்டைக் கணக்கு

3.1 அட்டை பரிவர்தனை நடவடிக்கைகளின் மூலம், ஏற்படும் தொகையினை வங்கி அட்டைக் கணக்கில் பற்று வைக்கலாம் என்பதுடன், அட்டை உரிமையாளரினால் செலுத்த வேண்டிய ஏதாவது சட்ட செலவீனங்கள் மற்றும் எல்லாவிதமான நிர்வாக செலவீனங்கள் மற்றும் அட்டையினை உபயோகிப்பதன் மூலமாக வங்கிக்கு ஏற்படும் ஏனைய செலவுகள் என்பனவை உள்ளடங்கலாக.

3.2 அட்டையின் உரிமையாளர், விற்பனை அல்லது பண முற்பண உறுதிச் சீட்டு இனை கைச்சாத்திட்டாலும், இல்லாவிட்டாலும், வங்கியினால் பற்று வைக்கப்படும் தொகையினை செலுத்துவதற்கான கடற்பாட்டை அட்டை உரிமையாளர் கொண்டுள்ளார்.

3.3 பிரதம அட்டை உரிமையாளரின் விண்ணப்பத்தில் உள்ள முகவரிக்கோ அல்லது அட்டை நிலையத்திற்கு, எழுத்து மூலமாக பணம் செலுத்த வேண்டிய திகதியில் இருந்து குறைந்தது பதினான்கு (14) நாட்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட முகவரிக்கு மாதாந்த கணக்கு கொடுப்பனவுப் பட்டியல் அனுப்பி வைக்கப்படும்.

3.4 கொடுப்பனவுத் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அட்டை உரிமையாளர், ஆகக் குறைந்த கட்டணத்தை செலுத்த வேண்டும். ஆகக் குறைந்த கட்டணம் என்பது, அட்டை உரிமையாளரின் மாதாந்தர கணக்கு விபரத்தில் காட்டப்பட்டுள்ள முழுத்தொகையாகும். மாதாந்திர கணக்கு திகதி அன்று மொத்த நிலுவையில் உள்ள தொகை கடன் வரையறையினை தாண்டும் பட்சத்தில் குறைந்த கட்டணமானது, கடன் வரையறைக்கு மேற்பட்ட தொகையுடன் மேலதிகமான நிலுவையின் 5% மும் சேர்க்கப்படும்.

3.5 திவாலாவது அல்லது பிரதம அட்டை உரிமையாளர் மரணமாவது அல்லது அட்டை உரிமையாளரினால் ஒப்பந்தத்திற்கு எதிரான செயல்பாடு காரணமாக வங்கி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அமைய இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் முழுமையாக உடனடியாக செலுத்தப்பட வேண்டும்.

3.6 வங்கிக்கு செலுத்தப்படும் எந்த கொடுப்பனவுகளும், அட்டையின் கணக்கில் வரவு வைக்கப்பட்டதன் பின்னரேயே செயல்பாட்டிற்கு வரும்.